செய்தி வெளியீடு எண்:13 நாள்:09/1/2009

# <u>செய்திக் குறிப்பு</u>

தமிழ்நாட்டிலுள்ள சரக்கு வாகனங்கள், இருமுனை வரி செலுத்தி கர்நாடகா மாநிலத்திற்கு சரக்கு ஏற்றிச்செல்லத் தேவைப்படும் மேலொப்பம் பெற ஒதுக்கப்பட்டுள்ள உச்சவரம்பு எண்ணிக்கையில் **<u>410</u>** இடங்கள் காலியாக உள்ளதாக கர்நாடகா மாநிலப் போக்குவரத்து அதிகாரியிடமிருந்து கடிதம் பெறப்பட்டுள்ளது. இந்த காலியிடங்களை நிரப்ப தேவையான பரிந்துரைக் கடிதம் வழங்க தமிழ்நாட்டிலுள்ள சரக்கு வாகன உரிமையாளர்களிடமிருந்து புதிய விண்ணப்பங்கள் பெற தமிழ்நாடு மாநிலப் போக்குவரத்து அதிகாரி முடிவு செய்துள்ளார்.

எனவே, இருமுனை வரி செலுத்தி கர்நாடகா மாநிலத்தில் தம்முடைய சரக்கு வாகனங்களை இயக்க விருப்பமுள்ள சரக்கு வாகன உரிமையாளர்கள் சென்னை சேப்பாக்கத்திலுள்ள மாநில போக்குவரத்து அதிகாரியின் அலுவலகத்தில் குறிப்பிட்ட படிவத்தில், குறிப்பிட்ட கட்டணம் செலுத்தி, முறையாக விண்ணப்பிக்கலாம். **<u>இவ்விண்ணப்பங்கள் உச்சவரம்பு எண்ணிக்கை பூர்த்தியாகும்வரை மட்டும் பெறப்பட்டு, "முன்வருவோருக்கு முன்னுரிமை" என்ற அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு, கர்நாடகா மாநிலப் போக்குவரத்து அதிகாரிக்கு பரிந்துரைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.</u>** குறிப்பிட்ட விண்ணப்ப படிவங்களும், மற்ற விவரங்களும், சென்னை போக்குவரத்து ஆணையர் அலுவலகத்திலிருந்தோ அல்லது இணையதளம் www.tn.gov.in/sta–விலிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

****************

வெளியீடு: இயக்குர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.